1973 மார்ச் 22]

ரிட் முடியும் வரை காத்து நிற்கவேண்டியிருக்கிறது. விரைவுபடுத்த என்ன செய்யலாம் என்பதுபற்றி சட்டத்துறைதான் ஆலோசனை கூறவேண்டும். இப்போதுள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டு எந்த அளவிற்கு விரைவுபடுத்த முடியுமோ அவ்வளவு விரைவாக நடவடிக்கை எடுக்கவும் ஆக்கிரமிப்பாளர்களை அகற்றவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சட்டத் துறை ஆலோசனையின் பேரில் தக்க முடிவு எடுக்கலாம்.

திரு. காதர் பாட்சா என்ற வெள்ளைச்சாமி: இப்போது ஊராட்சி மன்றங்களிலுள்ள நத்தம் புறம்போக்கு நிலங்களை ஒப்படை செய்து தனியாருக்கு பட்டா வழங்கிவிட்ட பிறகு அவை பொதுமக்களுக்குப் பயன் படும் பொது இடங்களாக இருக்கின்றன என்று சொல்லி ரெவின்யூ துறைக்கு முறையீடு செய்தால் அதைப் பரிசீலனை செய்து முறைகேடாக வழங்கப்பட்டுள்ள பட்டாக்கள் ரத்து செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இப்போதே ஊராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட புறம்போக்குகளை பட்டா செய்வதாக இருந்தால் ஊராட்சி மன்றத்தைக் கேட்கிறோம். ஆனால் அவர்கள் சொல்கிற யோசனையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றில்லை. யாருக்காவது தவருக பட்டா கொடுக்கப்பட்டிருந்தால் அதை ரத்து செய்யும் அதிகாரம் அரசுக்கு இருக்கிறது.

திரு. கு. அ. பொம்மன்: கிராமப் பஞ்சாயத்து நிலங்களில் மேய்ச்சல் காடுகள் இல்லாமல் மரங்களை நட்டு விடுகிறார்கள். ஆகவே மாடுகளின் மேய்ச்சலுக்கு தொந்தரவு ஏற்படுகிறது. எனவே அப்படி மரங்கள் நடப்படுவது தடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அந்த அந்த ஊரின் நிலைமையைப் பொறுத்து தடுக்க முடிவுகள் எடுக்கலாம். அப்படி இடைஞ்சலாக இருப்பதைத் தடுக்க இப்போதே விதிமுறைகள் இருக்கின்றன. அந்தவகையில் அங்குள்ள அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக்கொள்ள லாம். அப்படி ஏதாவது இருக்குமானால் அதிகாரிகளுக்குத் தெரிவிக்கலாம்.

Consumer Price Index.

*466 Q.—Thiru N. Dennis: Will the Hon'ble the Minister for Labour be pleased to state :—

(*a*) the details of the Consumer Price Index for Industrial workers in Madras City for the year 1971 monthwise ; and

(*b*) the basis on which they have been prepared ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) விவர அறிக்கை* யொன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

---

*108-109-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

(இ) சென்னை மாநகரில் உள்ள தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கான நுகர் பொருள் விலைக் குறியீட்டு எண் சிம்லாவில் உள்ள தொழிலாளர் நலக்கழகம், 1958-59 இல் தொழிற்சாலைத் தொழிலாளர்களிடையே நடத்திய குடும்ப வாழ்க்கை ஆய்வை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு திங்களும் தொகுக்கப்படுகிறது. பொருள்கள் பட்டியலும் பணிகளும் ஐந்து தொகுதிகளாக வகைப் படுத்தப்படுகின்றன. அவை யாவன : உணவு, எரிபொருள்—ஒளிபொருள், வீட்டுவசதி, உடை, பல்வகை.

திரு. என். டென்னிஸ் : இந்தப் ப்ரைஸ் இன்டெக்ஸ் யாரால், எந்த ஸ்தாபனத்தால் தயாரிக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : நம்முடைய அரசாங்கச் சார்பில் புள்ளிவிவரத் துறையினர் இதைக் கண்காணிக்கிறார்கள். இந்தப் புள்ளி விவரங்களைத் தயாரிக்கிறார்கள். தயாரித்து அதை அறிவிக்க இவர்களுக்கு அதிகாரம் இல்லை. சிம்லாவில் உள்ள கழகத்திற்கு அனுப்பி மத்திய அரசு மூலம் வெளியிடப்படுகிறது. நமக்கு நேரடியாக அறிவிக்க அதிகாரம் இல்லை.

திரு. மா. வே. நாராயணசாமி : இந்த வாழ்க்கைச் செலவு புள்ளி விவர விவகாரத்தில் சில கணக்குகள் சரியான முறையில் போடப்படவில்லை. சரியான அடிப்படையில் தயாரிக்கப்படவில்லை என்ற ஒரு குறை சொல்லப்பட்டு, அதை மாநில தொழிலாளர் நல ஆலோசனை வாரியத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. தொழிற்சங்கத் தலைவர்கள், திரு. அந்தோனிப்பிள்ளை போன்றவர்களை உள்ளடக்கிய ஒரு குழு அமைக்கப்பட்டு, அது பரிசீலனை செய்யும் என்று அறிவிக்கப்பட்டது. அக்குழு வாழ்க்கைச் செலவு புள்ளிவிவர விவகாரத்தை பரிசீலனை செய்து அறிக்கை தந்திருக்கிறதா ? அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன ? அரசின் கருத்து என்ன ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : லேபர் அட்வைசரி போர்ட் கூட்டத்தில் இந்தப் புள்ளிவிவர அறிக்கைக்கு ஆட்சேபணை எழுப்பப்பட்டது. குறிப்பாக அந்தோணிப்பிள்ளை அவர்கள் அதிக ஆட்சேபனை தெரிவித்தார்கள். எனவே தொழிலாளர்கள் சார்பில் அவர்களையும், தொழில் அதிபர்கள் சார்பில் திரு சம்பத் அவர்களையும் இரண்டுபேர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. ஆனால் ஆறு மாதம் ஆகியும் அந்தக் குழு கூடவில்லை. கூடி விரைவில் அந்த அறிக்கையை தருமாறு வலியுறுத்தியிருக்கிறோம்.

திரு என். கே. பழனிசாமி : நவம்பர், டிசம்பரில் 1,400 புள்ளி என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு பல மடங்கு விலைகள் ஏறியும்கூட அந்தப் புள்ளி மட்டும் ஏறவில்லை. அதற்குக் காரணம் என்ன ? சர்க்கார் அதுபற்றி பரிசீலனை செய்வார்களா ? அதுபற்றி மத்திய அரசுக்கு எழுதுவார்களா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அதற்காகத்தான் இரண்டு பேர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டது. அது தன் அறிக்கையை அனுப்பவில்லை என்று தெரிவித்தேன்.

திரு. நா. வீராசாமி : இந்த வாழ்க்கைச் செலவு புள்ளிகள் நம் இந்தியத் துணைக் கண்டத்தில் "ஏ" கிளாஸ் ஸிட்டீஸ் என்று சொல்கிற டெல்லி, பம்பாய், கல்கத்தா போன்ற நகரங்களை விட சென்னை நகரில் குறைவாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறதே, அது உண்மைதானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு என். வி. நடராசன் : அந்த விவரம் இல்லை, தனிக் கேள்வி போடவும்.

திரு. எம். சுரேந்திரன் : 1935-க்கும் 1960-க்கும் இடையே உள்ள வாழ்க்கைச் செலவு புள்ளி பற்றி, அதன் வித்தியாசத்தை சரி செய்யாததால் தொழிலாளர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டு விட்டது என்ற புகார் இருக்கிறதே, அது பரிசீலனை செய்யப்பட்டதா ? அவர்களுக்கு கொடுக்கவேண்டிய பணம் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு விட்டனவா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : 35-ம் ஆண்டுக்கும் 60-ம் ஆண்டுக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை சரிக்கட்டி 4.76 பாயின்ட்ஸ் சேர்த்தால் 35–36க்கு உள்ள விகிதாசாரம் வரமுடியும். தனிப்பட்ட குறை இருந்தால் எழுதியனுப்பினால் விசாரிக்கப்படும்.

திரு. என். கே. பழனிசாமி : 72-ல் இந்த 38 புள்ளி பற்றி பரிசீலிக்க ஒரு குழு போட்டார்களே, அக்குழு கூடியதா, அதன் அறிக்கையை சர்க்காருக்கு தந்தார்களா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அதைத்தான் சொன்னேன் அக்குழு தனது பணியினை இதுவரை முடிக்கவில்லையென்று. எனினும் விரைவில் அக்குழு தன் அறிக்கையை அனுப்பும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

THIRU K. M. SUBRAMANIAM : Is there any instance of the Simla Committee not accepting the recommendations of Madras or is there any instance of Simla Committee suggesting an alternative or increasing or decreasing the Madras recommendations regarding cost of living index ?

மாண்புமிகு திரு என்.வி. நடராசன்: நம் மாநில புள்ளிவிவரத்துறை சிலவிவரங்களைச் சேகரித்து சிம்லாவிற்கு அனுப்புகிறது. அதைக் குறைப்பதும், கூட்டுவதும், எல்லாம் சிம்லா குழுவைப் பொறுத்திருக்கிறது. நம் மாநில அரசுக்கு நேரடியான அதிகாரம் கிடையாது.